DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 12.03.2026.

| | |
|---|---|
| Case No. | : CC. No.17/2025 |
| Deposition of Witness for Prosecution | : PW.5 |
| Name | : **மேகலா** |
| Father Name | : **சண்முகம்** |
| Village | : |
| Taluk | : |
| Caste | : xxxx |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E.Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 09.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரிகள் ஆஜரில்லை).**

**(எதிரிகளுக்காக பிரிவு 355 of BNSS Act-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டது).**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(11.45.A.M):-**

**முதல் விசாரணை:-**

தற்போது நான் தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 14.03.2025-ம் தேதி காலை 07.45 மணிக்கு நான் மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது குப்புசாமி த/பெ. அருணாசலம் என்பவரை ஓட்டுநராக பணிபுரியக்கூடிய அருள் பாலசுந்தரம் என்பவர் அழைத்து வந்தார். நான் குப்புசாமி த/பெ. அருணாசலம் என்பவர் தனக்கு தெரிந்த ஒரு நபர் கத்தியால் வெட்டியதாக கூறினார் நான் அவரை பரிசோதனை செய்தபோது சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் கண்டறியப்பட்டன. காயம் 1.இடது கையில் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் ஆழமாக வெட்டுக்காயம் மற்றும் இரத்தக்கசிவு இருந்தது. மேற்படி இரத்தக்கசிவிற்கு மட்டும் முதலுதவி சிகிச்சை அளித்து சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் கிசிச்சைக்காக பரிந்துரை செய்தேன். மேற்படி பரிந்துரையின் பேரில் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அங்கு அவருக்கு வழங்கிய

கருத்துரைப்படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்றிழக்கப்பட்டது. விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1. என்னை வழக்கு சம்மந்தமாக போலீசார் எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 14.03.2025-ம் தேதியன்று விசாரணை செய்தனர். அன்றைய தினமே விபத்து பதிவேட்டினை பார்த்து நான் எனது கருத்துரையை போலீசாரிடம் வாக்குமூலமாக கொடுத்தேன். விபத்து பதிவேட்டில் தெரிந்த நபர் ஒருவரால் 14.03.2025-ம் தேதி 07.00.P.M. மணிக்கு தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் முதலுதவி அளித்தேன், காயம் ஆழமாக இருந்ததால் நான் சிகிச்சை அளிக்கவில்லை. சேலம் அரசு மருத்துவமனையிலிருந்து கருத்துரையை எப்போது பெற்றேன் என்றால் 25.04.2025-ம் தேதி பெற்றேன். விபத்து பதிவேட்டுடன் காயச்சான்றினையும் இணைத்து போலீசாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. காயம்பட்ட நபருக்கு என்ன விதமான சிகிச்சை வழங்கப்பட்டது என எனது கருத்துரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கனமான தகரம் கையில் விழும் போது கூட இடது கை ஆழ்காட்டி விரல் மற்றும் நடுவிரலில் காயம் ஏற்பட வாய்புள்ளது என்றால் இருக்கலாம் ஆனால் காயம்பட்ட நபரை பரிசோதனை செய்தபோது அவ்வாறு தகரம் விழுந்ததால் ஏற்படக்கூடிய காயமாக இல்லை மிகவும் ஆழமாக இருந்தது. உயரமான இடத்திலிருந்து கூர்மையான இரும்பு பொருள் கையில் விழும்போது விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காயம் ஏற்பட வாய்பபுள்ளது என்றால் இருக்கலாம் ஆனால் அந்த விரலில் ஏற்பட வாய்பிள்ளை. சேலம் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற கருத்துரையின் படி தான் நானும் கொடுங்காயம் என கருத்துரை வழங்கினேன் என்றால் சரியல்ல, நான் பார்த்தபோதும் அவ்வாறு இருந்ததால் கருத்துரை வழங்கினேன்.

3. போலீசார் விசாரணையில் எஸ்டேட் ரைட்டர் மூலம் சிகிச்சைக்காக அனுமதிப்பட்டிருந்தவரை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியதன் பேரில் அங்கு சிகிச்சை அளித்த

மருத்துவர் திரு. கோபாலன் என்பவர் ஏற்பட்ட காயங்களின் தன்மைக்கு ஏற்ப சிகிச்சை அளித்து சிகிச்சை முடித்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட குப்புசாமி என்பவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை குறித்து கொடுங்காயம் என அபிபிராயம் தெரிவித்தன் பேரில் சேலம் அரசு மருத்துவமனை நிபுணரின் கருத்துரைப்படி கொடுங்காயம் என குறிப்பிட்டு காயச்சான்று வழங்கினேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. நான் குப்புசாமி என்பவரை பார்க்கவில்லை என்றும், அவருக்கு ஏற்பட்ட காயங்களை பரிசோதனை செய்யவில்லை என்றும், சேலம் அரசு மருத்துவமனை மருத்துவ நிபுணர் வழங்கிய கருத்துரை படியே நான் கருத்துரை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல, விபத்து பதிவேட்டில் நான் கொடுங்காயம் என குறிப்பிட்டுள்ளேன். நான் சிகிச்சை அளிப்பதற்கு முன்னே காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என அனுமானித்து விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டேன் என்றால் சரிதான். குப்புசாமி என்ற நபர் எனக்கு நன்கு தெரிந்த நபர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டினை முறையாக பராமரிக்காத காரணத்தினால் நேரம் மற்றும் கருத்துரையை தவறுதலாக வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.31.P.M.)**

**(முதல் விசாரணை முழுவதும் வீடியோ காண்பிரன்ஸ் மூலம் பதிவு செய்யப்பட்டது).**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.